Regional Bulletin / Puducherry / Tamil /18.10/ 19.04.2024 /

வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

நாள் 19.04.2024 வெள்ளிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

17 மாநிலங்கள் மற்றும் 4 யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 102 தொகுதிகளில் முதல்கட்ட மக்களவை தேர்தல் வாக்குப்பதிவு இன்று விறுவிறுப்பாக நடைபெற்றது.

தமிழகத்தில் மாலை 5 மணி வரை, 62.02 சதவிகித வாக்குகளும், புதுச்சேரியில், மாலை 5 மணி வரை, 73 சதவிகித வாக்குகளும் பதிவாகி இருந்தன.

முதல் கட்ட மக்களவை தேர்தலுடன் சேர்த்து அருணாச்சல பிரதேசம் மற்றும் சிக்கிம் மாநில சட்ட மன்ற தேர்தலும் ஒரே கட்டமாக இன்று நடைபெற்றது.

பிரதமரும், மூத்த பிஜேபி தலைவருமான திரு. நரேந்திர மோடி இன்று மஹாராஷ்டிரா மாநிலம், வார்தா தொகுதியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்,

மக்களவை தேர்தல் 1 (18)

17 மாநிலங்கள் மற்றும் 4 யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 102 தொகுதிகளில் முதல்கட்ட மக்களவை தேர்தல் வாக்குப்பதிவு இன்று விறுவிறுப்பாக நடைபெற்றது. கடும் வெய்யிலையும் பொருட்படுத்தாமல், மக்கள் ஆர்வத்துடன் வாக்களித்தனர். மாலை 5 மணி நிலவரப்படி, மேற்கு வங்கத்தில் 77.57 சதவிகித வாக்குகளும், திரிபுராவில் 76.10, மத்திய பிரதேசத்தில் 63.25, உத்தரபிரதேசத்தில் 57.54, உத்தராகண்டில் 53.56, மற்றும், மஹாராஷ்டிராவில் 54.85 சதவிகித வாக்குகளும் பதிவாகி இருந்தன. தமிழகத்தில், மாலை 5 மணி வரை, 62.02 சதவிகித வாக்குகள் பதிவாகி உள்ளன.

புதுச்சேரி மக்களவை தொகுதி வாக்குப்பதிவு நிலவரங்கள் குறித்து மாவட்ட தேர்தல் அதிகாரியும், மாவட்ட ஆட்சியருமான திரு. அ. குலோத்துங்கன் சற்று முன்னர் எமது செய்தியாளரிடம்

பேசுகையில் மாலை 5 மணி வரை, 73 சதவிகித வாக்குகள் பதிவாகியுள்ளதாகவும், மாலை 6 மணிக்குள், 82 முதல், 85 சதவிகிதம் வரை, வாக்குகள் பதிவாகும் என எதிர்பார்க்கப் படுவதாகவும் கூறினார்.

(வாய்ஸ்)

மாலை 5 மணி நிலவரப்படி, புதுச்சேரி மக்களவை தொகுதியில் அதிகபட்சமாக, பாகூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட வாக்குச்

**மக்களவை தேர்தல் 2 (19)**

சாவடிகளில் 83.25 சதவிகிதமும், ஏம்பலம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட வாக்குச் சாவடிகளில் 78.41 சதவிகிதமும் வாக்குகள் பதிவாகி இருந்தன.

புதுச்சேரியில் முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று காலை, திலாசுப்பேட்டை அரசு நடுநிலைப் பள்ளியில் உள்ள வாக்குச் சாவடியில் வாக்களித்தார். பிஜேபி வேட்பாளர் திரு. நமசிவாயம், வில்லியனூர் அரசு தொடக்கப்பள்ளியில் உள்ள வாக்குச் சாவடியிலும், காங்கிரஸ் வேட்பாளர் திரு, வைத்திலிங்கம்

மடுகரை அரசுப் பள்ளி வாக்குச் சாவடியிலும் வாக்களித்தனர். அஇஅதிமுக வேட்பாளர் திரு. தமிழ் வேந்தன் வீராம்பட்டினத்தில் உள்ள வாக்குச் சாவடியில் வாக்களித்தார். முன்னாள் முதலமைச்சர் திரு நாராயணசாமி, வஉசி அரசு ஆண்கள் மேல் நிலைப் பள்ளியில் உள்ள வாக்குச்சாவடியிலும், சட்ட மன்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு. சிவா இளங்கோ நகர் வாக்குச் சாவடியிலும் வாக்களித்தனர்.

கோரிமேடு, அன்னை தெரேசா செவிலியர் பயிற்சிக் கல்லூரி வாக்குச் சாவடியில், தலைமைச் செயலர் திரு. சரத் செளஹான், தலைமைத் தேர்தல் அதிகாரி திரு ஜவஹர், மாவட்ட தேர்தல் அதிகாரி திரு.குலோத்துங்கன் ஆகியோர் இன்று காலை வாக்களித்தனர்.

**மக்களவை தேர்தல் 3 (19)**

தொடர்ந்து பசுமைத் தேர்தலின் ஒரு பகுதியாக, இவர்கள் அங்கு மரக்கன்றுகளை நட்டனர்.

மாலை 5 மணி நிலவரப்படி, காரைக்கால் மாவட்டத்தில், அதிகபட்சமாக, நெடுங்காடு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட வாக்குச் சாவடிகளில் 76.22 சதவிகித வாக்குகளும், திருநள்ளாறு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட வாக்குச் சாவடிகளில் 72.58 சதவிகித வாக்குகளும் பதிவாகி இருந்தன.

காரைக்காலில், மாவட்ட ஆட்சியரும், மாவட்ட தேர்தல் அதிகாரியுமான திரு. மணிகண்டன், இன்று பல்வேறு வாக்குச் சாவடிகளுக்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். நேரு நகர் பெருந்தலைவர் காமராஜர் கல்வியியல் கல்லூரி, கோட்டுச்சேரி வ.உ.சி அரசு மேல்நிலைப்பள்ளி ஆகிய இடங்களில் உள்ள வாக்குச்சாவடிகள் இதில் அடங்கும்.

மாஹேயில், மாலை 5 மணி நிலவரப்படி, 61.76 சதவிகித வாக்குகள் பதிவாகி இருந்தன. ஏனாமில் மாலை 5 மணி வரை, 70.59 சதவிகித வாக்குகள் பதிவாகி இருந்ததாக எமது ஏனாம் நிருபர் தெரிவிக்கிறார். புதுச்சேரி முதுநிலை காவல்துறை கண்காணிப்பாளர் திருமதி ஸ்வாதி சிங், காவல்துறை கண்காணிப்பாளர்கள் திரு. ராஜசேகர், திரு. ரங்கநாதன்

ஆகியோர் இன்று ஏனாமில் சாவித்ரி உள்ளிட்ட இடங்களில் பல்வேறு வாக்குச் சாவடிகளுக்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டனர்.

புதுச்சேரியில் 150 ஆண்டு பழமையான வஉசி அரசு மேல்நிலைப் பள்ளியில் பாரம்பரிய அம்சங்களுடன் கூடிய 2 வாக்குச் சாவடிகள் செயல்பட்டன. பசுமைத் தேர்தலின் ஒரு அங்கமாக இந்த வாக்குச்சாவடிகள், இயற்கைப் பொருட்களால் அலங்கரிக்கப்பட்டு இருந்தன. இங்கு வாக்களிக்க வந்த வாக்காளர்களுக்கு, மோர், கஞ்சி மற்றும் துணிப்பை வழங்கப்பட்டது. பசுமைத் தேர்தலின் மற்றொரு பகுதியாக, தேர்தல் துறை விடுத்து இருந்த வேண்டுகோளின் படி, புதுச்சேரியில் பெரும்பாலான வாக்காளர்கள் இன்று நடந்தே வாக்குச்சாவடிக்கு வந்து வாக்களித்தனர். நடந்து வந்து வாக்களித்தோர் எண்ணிக்கையை கணக்கிட, 93 63 83 19 50 என்னும் தனி மொபைல் எண் அறிவிக்கப் பட்டிருந்தது. நடந்து வந்து வாக்களித்தவர்கள், இந்த எண்ணை அழைத்து, பேசாமல்,

உடனேயே நிறுத்தி விடலாம் என்றும், இத்தகைய அழைப்புகள் மொத்தக் கணக்கில் சேர்த்துக்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியிலும் தலா ஒரு வாக்குச்சாவடியை முற்றிலும் பெண் ஊழியர்களைக் கொண்டு நிர்வகிக்கும் திட்டத்தின் கீழ்

**மக்களவை தேர்தல் 5 (5)**

உப்பளம் பெண்கள் மேல்நிலைப் பள்ளி உள்ளிட்ட இடங்களில் பிங்க் வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு இருந்தன. இது குறித்து தாங்கள் பெருமிதம் அடைவதாகவும், வாக்குச் சாவடி நடைமுறைகள் முற்றிலும் பெண்களே நிர்வகிப்பதால் எந்தப் பிரச்சனையும் இருக்கவில்லை என்றும் பெண் அலுவலர்கள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

**தமிழ்நாடு (5)**

தமிழகத்தில் மாலை 5 மணி நிலவரப்படி அதிகபட்சமாக கள்ளக்குறிச்சி மக்களவை தொகுதியில், 72.43 சதவிகித

வாக்குகள் பதிவாகி இருந்தன. சிதம்பரம் தொகுதியில், 69.32 சதவிகிதமும், கடலூர் தொகுதியில் 63.92 சதவிகிதம், மற்றும், விழுப்புரம் தொகுதியில் 66.62 சதவிகிதமும், வாக்குகள் பதிவாகி இருந்தன.

## தேர்தல் – நாடு 1 (18)

102 தொகுதிகளில் இன்று நடைபெற்ற மக்களவை தேர்தலுடன் சேர்த்து அருணாச்சல பிரதேசம் மற்றும் சிக்கிம் மாநில சட்ட மன்ற தேர்தலும் ஒரே கட்டமாக நடைபெற்றது. மாலை 5 மணி நிலவரப்படி, சிக்கிம் சட்டமன்ற தேர்தலில், 67.95 சதவிகித வாக்குகளும், அருணாச்சல் சட்டமன்ற தேர்தலில் 65.03 சதவிகித வாக்குகளும் பதிவாகி இருந்தன.

முதல் கட்ட மக்களவை தேர்தலில், மொத்தம் 1, 625 வேட்பாளர்கள் போட்டிக் களத்தில் இருந்தனர். சுமார் 8 கோடியே 20 லட்சம் பெண்கள், மற்றும் சுமார் 11 ஆயிரம் 3ஆம் பாலின வாக்காளர்கள் உட்பட மொத்தம் 16 கோடியே 63 லட்சம் பேர் வாக்களிக்க தகுதி பெற்று இருந்தனர். இவர்கள் வாக்களிக்க,

மொத்தம் 1 லட்சத்து 63 ஆயிரம் வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு இருந்தன. அனைத்து வாக்குச் சாவடிகளிலும், வாக்காளர்களுக்கான, குடிநீர், கழிப்பிடம், நிழற்பந்தல், சாய்வு தளம், சக்கர நாற்காலி, தன்னார்வலர் உதவி உள்ளிட்ட வசதிகள் செய்யப்பட்டு இருந்தன. தேர்தல் நடைமுறைகளைக் கண்காணிக்க, பல்வேறு மக்களவை தொகுதிகளில் மொத்தம் 361 பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டு இருந்தனர். 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பறக்கும் படைகளும், சுமார் 2 ஆயிரம் வீடியோ கண்காணிப்புக் குழுக்களும், செயல்படுத்தப் பட்டன.

## தேர்தல் – நாடு 2 (6)

வாக்குச் சாவடிகளில், வெப்-காஸ்டிங் வசதி நிறுவப்பட்டு, வாக்குப்பதிவு நடைமுறைகள் கண்காணிக்கப் பட்டன. மாற்றுத் திறனாளிகள், மற்றும் 85 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கு, வீட்டில் இருந்தே வாக்களிக்கும் வசதி வழங்கப்பட்டது. முதல் முறையாக வாக்களிக்கத் தகுதி பெற்ற சுமார் 36 லட்சம் இளம் வாக்காளர்கள் அனைவரும் வாக்களிப்பதை உறுதிப் படுத்தும்

வகையிலும், பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை, தேர்தல் ஆணையம் நடத்தியது.

இன்றைய முதல்கட்ட மக்களவை தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களில், திரு. நிதின் கட்கரி, திரு. சர்பானந்த சோனோவால், டாக்டர் ஜிதேந்திர சிங், டாக்டா தமிழிசை சௌந்தரராஜன், திரு.அண்ணாமலை உள்ளிட்ட பிஜேபி தலைவர்களும், திரு. கௌரவ் கோகோய், திரு. கார்த்தி சிதம்பரம் உள்ளிட்ட காங்கிரஸ் தலைவர்களும், திரு. தயாநிதி மாறன், திருமதி கனிமொழி உள்ளிட்ட திமுக தலைவர்களும் அடங்குவர்.

## மோடி பிரச்சாரம் (15)

வரும் 26ஆம் தேதி நடைபெறவுள்ள 2ஆம் கட்ட மக்களவை தேர்தலுக்கான தேர்தல் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, பிரதமரும் மூத்த பிஜேபி தலைவருமான திரு. நரேந்திர மோடி இன்று மாலை மஹாராஷ்டிரா மாநிலம், வார்தா தொகுதியில் பிரச்சாரம் மேற்கொண்டார். இம்முறை மக்கள் தமக்கு அளிக்கும் ஒவ்வொரு ஓட்டும், மக்களுக்காக இன்னும் கடினமாக உழைக்கும் உணர்வை

வழங்கும் என்று அவர் கூறினார். இன்று மத்திய பிரதேச மாநிலம் தாமோ தொகுதியிலும் திரு.நரேந்திர மோடி தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். சிறந்த எதிர்காலத்தை நாட்டிற்கு வழங்கக் கூடிய வலுவாக அரசுக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார். கொரோனா பெருந்தொற்று காலத்தில் நாட்டிற்கே முதலிடம் என்ற அடிப்படையில் அனைத்து மக்களின் நலன்களை பாதுகாக்கும் வகையில் அரசு செயல்பட்டதாக திரு. நரேந்திர மோடி கூறினார். உலக அளவிலான நிச்சமற்ற தன்மையால் அண்டை நாடுகள் உட்பட பல நாடுகள் அடிப்படை தேவைகளுக்கே அல்லாடிய காலத்திலும், இந்தியா மகத்தான வெற்றிப் பாதையில் நடைபோட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

ரயில்வே (9)

ரயில்வே துறை, இவ்வாண்டு கோடைக் கால பயணிகள் நெரிசலை சமாளிக்க, பல்வேறு வழித் தடங்களுக்கு இடையே, சாதனை அளவில், 9 ஆயிரத்து 111 ரயில்களை இயக்குகிறது.

கோடைக் காலத்தில் அனைத்து ரயில் நிலையங்களிலும் பயணிகளுக்கு குடிநீர் கிடைப்பதை உறுதிப்படுத்துமாறு மண்டல ரயில்வே நிர்வாகங்களுக்கு ரயில்வே துறை உத்தரவிட்டுள்ளது. அனைத்து ரயில் நிலையங்களிலும், கூட்ட நெரிசலைக் கட்டுப்படுத்தவும், போதிய ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. முக்கிய ரயில் நிலையங்களில், மூத்த ரயில்வே அதிகாரிகள் முகாமிட்டு, இப்பணிகளை கண்காணித்து வருகின்றனர்.

வானிலை (10)

அடுத்த 24 மணி நேரத்திற்கு, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை நாளைய தினம் சற்று குறையலாம் என்றாலும், அடுத்த 3 நாட்களில் வெப்பநிலையில் பெரிய மாற்றத்திற்கு வாய்ப்புகள் குறைவு என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வெப்பநிலையும் ஈரப்பதமும் அதிகமாக இருக்கும் பொழுது ஓரிரு இடங்களில் அசௌகரியம் ஏற்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழகப் பகுதிகளின் மேல், வளிமண்டல

கீழடுக்கு சுழற்சி நிலவுவதால் இன்று தமிழகத்தின் உள் மாவட்டங்களிலும், நாளை மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களிலும், ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை இருக்கலாம் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## ஐபிஎல் (4)

ஐபிஎல் கிரிக்கெட்டில் இன்று இரவு 7.30 மணிக்கு லக்னோவில் நடைபெறும் போட்டியில், லக்னோ-சென்னை அணிகள் மோத உள்ளன. நேற்று இரவு, பஞ்சாப்- மும்பை அணிகளுக்கு இடையே, சண்டிகரில் நடைபெற்ற போட்டியில், மும்பை அணி, 9 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

## நியமனம் (6)

இந்திய கடற்படையின் துணைத்தலைவர் வைஸ் அட்மிரல் தினேஷ் திரிபாதி, கடற்படையின் அடுத்த தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். கடற்படை தலைவர் பதவியில் இருந்து,

அட்மிரல் ஹரிகுமார், வரும் 30ஆம் தேதி ஓய்வு பெறுவதைக் கருத்தில் கொண்டு, புதிய நியமனம் அறிவிக்கப் பட்டுள்ளது. கடற்படை தலைவராக நியமிக்கப்பட்டுள்ள திரு. தினேஷ் திரிபாதி, ஏற்கனவே, மேற்கு மண்டல கடற்படைத் தலைவராகவும் பதவி வகித்துள்ளார்.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

17 மாநிலங்கள் மற்றும் 4 யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 102 தொகுதிகளில் முதல்கட்ட மக்களவை தேர்தல் வாக்குப்பதிவு இன்று விறுவிறுப்பாக நடைபெற்றது.

தமிழகத்தில் மாலை 5 மணி வரை, 62.02 சதவிகித வாக்குகளும், புதுச்சேரியில், மாலை 5 மணி வரை, 73 சதவிகித வாக்குகளும் பதிவாகி இருந்தன.

முதல் கட்ட மக்களவை தேர்தலுடன் சேர்த்து அருணாச்சல பிரதேசம் மற்றும் சிக்கிம் மாநில சட்ட மன்ற தேர்தலும் ஒரே கட்டமாக இன்று நடைபெற்றது.

பிரதமரும், மூத்த பிஜேபி தலைவருமான திரு. நரேந்திர மோடி இன்று மஹாராஷ்டிரா மாநிலம், வார்தா தொகுதியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்,